தேதி.22.07.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 145/2022 திரு.மகேந்திரன் (எ) நஞ்சப்பன் வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை என் தகப்பனார் இரண்டு கிரையப்பத்திரங்கள் மூலமாக வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த அசல் கிரையப்பத்திரங்கள் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அசல் கிரையப்பத்திரங்களை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது என்னிடம் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு 12.10.2015ம் தேதியில் வழக்கு சொத்தை பொருத்து ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றும் அந்த சமயத்தில் மேற்படி அசல் கிரையப்பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கும்போது அவர் கிரையப்பத்திரத்தை கேட்டார் அப்போது நான் கொடுத்தேன். இரண்டு கிரையப்பத்திரங்களையும் அ.வ.எண்.241/2018 வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.241/2018 வழக்கில் நான் எதிர் வாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.241/2018 வழக்கின் எதிர்வாதத்தில் வாதியிடத்தில் ரூபாய் ஐந்து லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு அடமான பத்திரம் எழுதிக்கொடுக்க சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனை எந்த வருடம் வாங்கினேன்

என்றால் 2014ம் வருடம் வாங்கினேன். நான் கடன் பெற்றதற்கு அந்த கடனை திருப்ப செலுத்த தயாராக உள்ளேன் என்றோ இந்த வழக்கிலோ அ.வ.எண்.241/2018 வழக்கிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆனால் இன்று வரை அந்த கடன் வாங்கிய தொகையை நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் எந்த வருடம் வரை வட்டி செலுத்தினேன் என்றால் 2018ம் வருடம் வரை வட்டி செலுத்தியுள்ளேன். நான் வட்டி கட்டிவந்ததற்கு இரசீது ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. நான் சொத்தை அடமானம் வைக்க தான் சென்றேன் என்று சொல்லிவிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவகம் சென்றிருந்தபோது அங்கு பத்திரத்தை படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்தேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை நம்பிக்கையின் படி கையெழுத்து செய்தேன். சார்பதிவாளர் கிரைய செய்து கொடுக்க விருப்பமா என்று கேட்டு தான் கையெழுத்து பெறுவார்கள் என்றால் என்னிடம் கேட்கவில்லை. கந்துவட்டி கேட்டு 1ம் பிரதிவாதி மிரட்டுகிறார் என்று காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடந்ததா என்றால் இல்லை. நான் கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் தான் எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் நோக்கத்தோடு தான் 1ம் பிரதிவாதியிடம் அசல் கிரைய ஆவணத்தை ஒப்படைத்தேன் என்றும், சொத்தை சுவாதீனம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எந்த ஊர் என்றால் தாண்டாம்பாளையம் ஆகும். அது சத்தியிலிருந்து 4 கி.மீ தூரத்தில் உள்ளது. மேற்படி

வழக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டை 1ம் பிரதிவாதி பூட்டி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் இரவோடு இரவாக பூட்டை உடைத்து சொத்தில் அத்து மீறி நுழைந்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் அ.வ.எண்.241/2018 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கடனுக்காக அடமானம் எழுதி வைக்க சென்றேன் என்று சொல்வது பொய் என்றும், எனவே நான் சுவாதீனத்தை பிரதிவாதிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. பொதுவாக அடமானம் என்று எழுதிக்கொடுத்தால் அசல் பத்திரத்தை கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. உண்மையாலும் நான் கிரையம் செய்து கொடுத்ததால் தான் அசல் ஆவணங்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.